தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 115 | 4 Pages | 23.11.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 18254 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 115 | 4 பக்கங்கள் | 23.11.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று**

**விளக்கம்:**
**இணையில்லாத ஓர் அறமாகக் கொல்லாமை நல்லது, அதற்குஅடுத்தநிலையில்கூறத்தக்கதாகப்பொய்யாமை நல்லது.**

## ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரம்; மோடிக்கு தொடர்பா? கனடா திட்டவட்ட மறுப்பு



ஒட்டவா, நவ.23

வட அமெரிக்க நாடான கனடாவில், காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்தாண்டு கொல்லப்பட்டார். கனடா குடியுரிமை பெற்றுள்ள அவரது கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளது என அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேரடியாக குற்றஞ்சாட்டினார். இதற்கு, மத்திய அரசு கண்டனம் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து, கனடா இந்தியா இடையேயான இரு தரப்பு உறவுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இதனிடையே, கனடாவை சேர்ந்த பிரபல செய்தி நிறுவனம் ஒன்று, நிஜ்ஜார் கொலை வழக்கில் பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத் துறை மந்திரி எஸ். ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்கு தொடர்பு இருப்பதாக செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது..

இந்த நிலையில், கனடா செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியை அந்நாட்டு அரசு மறுத்துள்ளது. இது தொடர்பாக கனடா பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நதாலி ஜி ட்ரூயின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது:

கடந்த அக்டோபர் 14ஆம் தேதி, கனடாவில் இந்திய தூதரக அதிகாரிகள் மீதுகனடாகாவல்துறையினர்பகிரங்ககுற்றச்சாட்டுகளைமுன்வைத்தனர். ஆனால், பிரதமர் மோடி, அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை இந்த குற்றச் செயல்களுடன் தொடர்பு படுத்தி கனடா அரசு எதுவும் கூறவில்லை. அதற்கான ஆதாரங்களும் இல்லை.இதற்கு எதிர்மாறாக வெளியாகும் அனைத்து செய்திகளும் தவறானவை" என்று கூறப்பட்டுள்ளது.

## கிழக்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 47 பேர் பலி



பெய்ரூட், நவ.23

இஸ்ரேல் மீது கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ந்தேதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.


ஓராண்டுக்கு மேலாக நடந்து வரும் மோதலில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்காசாபகுதியில்உயிரிழந்துஉள்ளனர்.லட்சக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இஸ்ரேலை தாக்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், கிழக்கு லெபனானின் கவர்னரேட் பால்பெக்ஹெர்மெல் உள்ள பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் குறைந்தது 47 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 22 பேர் காயமடைந்தனர் என்று கவர்னர் பச்சீர் கோடர் தெரிவித்துள்ளார்.

கவர்னரேட் முழுவதும் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உயிரிழப்புகள் நிகழ்ந்தன, அழிக்கப்பட்ட வீடுகளின் இடிபாடுகளுக்கு அடியில் காணாமல் போனவர்களை மீட்புக் குழுக்கள் இன்னும் தேடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய ராணுவம் நேற்று தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் 48 வான்வழி தாக்குதல்களை நடத்தியதாகவும், அதே சமயம் தெற்கு லெபனானில் உள்ள 18 எல்லை நகரங்கள் மற்றும் கிராமங்களை குறிவைத்து சுமார் 100 குண்டுகள் வீசியதாகவும் லெபனான் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

## கனடாவில் பொருளாதார நெருக்கடி: 25 சதவீத பெற்றோருக்கு போதிய உணவு இல்லை ஆய்வில் தகவல்



ஒட்டாவா, நவ.23

கனடா நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. பணவீக்கம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் கனடா மக்கள் மோசமான நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். மளிகை பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. நடுத்தர வருவாய் உள்ள மக்கள் குடும்பம்நடத்தவேமுடியாமல்சிரமப்படுகின்றனர்.உணவுவங்கிகளிலும் பற்றாக்குறை நிலவுகிறது.

இந்த சூழலில், அங்குள்ள மக்களிடம் சர்வதேச தொண்டு நிறுவனமான சால்வேஷன் ஆர்மி ஆய்வு நடத்தி நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கையில், 25 சதவீத கனடா பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு போதுமான உணவளிப்பதற்காக தங்கள் உணவைக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கெடுக்கப்பட்டவர்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் மற்ற தேவைகளுக்காக மளிகைப் பொருட்களுக்கான செலவைக் குறைத்ததாக கூறி உள்ளனர்.

விலைவாசியை குறைப்பதற்காக சில அத்தியாவசிய பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நிறுத்தி வைப்பார் என எதிர்பார்க்கப்படும் சமயத்தில் இந்த ஆய்வறிக்கை வெளியாகியிருக்கிறது.

# பட்டாபிராமில் புதிய டைடல் பூங்கா மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்





சென்னை, நவ.23

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டின் வடபகுதியில் உள்ள நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில், ரூ. 330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட தேவையான, நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், சுகாதார வசதி, தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள், சிசிடிவி கேமரா வசதிகள், 927 கார்கள் மற்றும் 2,280 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, அரங்கம், 24 மணி நேர பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடமானது, 6,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையிலும் பசுமை கட்டடம் வழிமுறைகளின்படியும் கட்டப்பட்டுள்ளது.

பட்டாபிராமில் இப்புதிய டைடல் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சார்ந்த குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும். டைடல் பூங்கா திறப்பு விழாவின்போது, பல்வேறு தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் அளிக்கப்பட்டுள்ள தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை முதல்அமைச்சர் வழங்கினார். இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.

## வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு வேண்டி வழக்கறிஞர், இணை செயலாளர் திருப்பூர் மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் சார்பாக கலெக்டரிடம் மனு



திருப்பூர்: 23

வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு வேண்டி S.சரவணக்குமார் B. Sc.LL.B வழக்கறிஞர் இணை செயலாளர் திருப்பூர் மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் சார்பாக திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்

மேலும் அவர்கள் கூறியதாவது தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் வழக்கறிஞர்கள் முறையாக பதிவு செய்து வழக்கறிஞர் பணியை செய்து வருகின்றனர் சுமார் 10 ஆண்டுகளில் 200க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பல்வேறு காரணங்களால் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு அவர்களின் குடும்பங்கள் அனாதையாக ஆதரவற்று தவித்து வருகிறார்கள்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் வழக்கறிஞர்கள் படுகொலை அதிகம் ஒவ்வொரு ஆண்டும் அதிக நாட்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபடுவதும் தமிழக வழக்கறிஞர்கள் தான் ஆனாலும் தமிழக அரசும் காவல் துறையும் மாவட்ட அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் கொஞ்சமும் கருணை காட்டாது இன்னமும் படுகொலைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றனர்

நாள்தோறும் செய்தித்தாள்களில் வழக்கறிஞர் கொலை செய்திகளை பார்த்து பேரமைதி காத்து வருகின்றனர்

இந்த மாதத்தில் மட்டும் நாகர் கோவிலில் கிறிஸ்டோபர் ஜூபி என்ற வழக்கறிஞரும் ஓசூர் நீதிமன்ற முன்பாக கண்ணன் என்ற வழக்கறிஞரும் மிக கொடூரமான முறையில் கொலையும் கொலை முயற்சியில் தாக்கப்பட்டார் இன்னும் எத்தனை படுகொலை நடக்க வேண்டும் என்று இந்த சமூகம் காத்துக் கொண்டிருக்கிறதோதெரியவில்லை ஆகவே வழக்கறிஞர்கள்தன் தொழிலையும் தம்மையும் ஒருசேர பாதுகாக்க வேண்டி இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் தொழில் ரீதியாக தனிப்பட்ட காரணமாக என எந்த சூழ்நிலையிலும் ஒருவர் கொலை செய்யப்பட்டாலும் அவர் வழக்கறிஞர் என்று அடையாளத்தில் இருப்பது அவரை தொழில் ரீதியாக கொலை செய்யப்படுவதற்கு சமமானதாகும் ஆகவே வழக்கறிஞர் பாதுகாப்பினை உறுதி செய்ய தமிழக அரசை தாங்கள் வலியுறுத்தியும் வழக்கறிஞர்களுக்கு தொழில் பாதுகாப்பு அளித்திடவும் வகையில் துப்பாக்கி வைத்துக்கொள்ள உரிமம் வழங்கும் நடைமுறைகளை எளிதாக்கி அனுமதி அளித்து பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம் இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தனர்

## நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் குழந்தைகள் நலன் பாதுகாப்பு நிகழ்ச்சி



திருச்சி, நவ.23

நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் குழந்தைகள் நலன் பாதுகாப்பு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடுஅரசுகுழந்தைகள்நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன் சார்ந்த நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமையாசிரியர் குணசீலராஜ் தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் சார்லஸ் திரவியம் முன்னிலை வகித்தார். தென்திருப்பேரை ஆரம்ப சுகாதார நிலைய பள்ளி சிறார் மருத்துவ குழு மருத்துவர் பத்ரி ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். குழந்தைகள் பாதுகாப்பின்அவசியம் குறித்தும், குழந்தைகளின் பாதுகாப்பிற்காக செயல்பட்டு வருகின்ற 24 மணி நேர அவசர சேவை எண் 1098 குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அவசர சேவை அழைப்பு எண் குறித்த அறிவிப்பு பலகை பள்ளியில் நிரந்தரமாக காட்சிப்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில், உடையார் குளம் அரசு மருத்துவமனை செவிலியர்கள் ரேவதி, லீதியாள், பள்ளி குழந்தைகள் நல அலகு பொறுப்பாளர் அலெக்சன் கிறிஸ்டோபர் ஆகியோர் கலந்து கொண்டனர். தேசிய மாணவர் படைஅலுவலர்சுஜித்செல்வசுந்தர் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைபள்ளியின்தாளாளர் சுதாகர், இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும்அலுவலகப்பணியாளர்கள் செய்திருந்தனர்.

## உசிலம்பட்டியில் புதிய வருவாய் கோட்டாட்சியர் (ஆர்டிஓ) பொறுப்பேற்பு



உசிலம்பட்டி, நவ.23

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியராக ரவிச்சந்திரன் பணியாற்றி வந்த நிலையில் அவர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் (பொது) நேர்முக உதவியாளராக பணிமாறுதல் செய்யப்பட்டார்.

இவருக்கு பதிலாக கரூர் மாவட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலராக பணியாற்றிய சண்முகவடிவேல் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியராக பணிமாறுதல் செய்யப்பட்டு வியாழக்கிழமை புதிய வருவாய் கோட்டாட்சியராக பொறுப்பேற்று கொண்டார். அவருக்கு வருவாய் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

# நடிகையை பிடிக்க 2 தனிப்படை, ஆனால் செந்தில் பாலாஜி தம்பியை பிடிக்க முடியலையா? செல்லூர் ராஜூ





மதுரை, நவ.23

மதுரையில் அதிமுகவின் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

ஒரு திரைப்பட நடிகை. அவரது மகனுக்கு 12 வயது. ஆட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவர். அந்த பெண் தான் மகனை முழுவதுமாக உடன் இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும்.

திமுக பேசாத பேச்சா.. எல்லோரும் பேசுவதைப் போல் அந்த நடிகையும் பேசிவிட்டார். சரி அந்த விஷயத்திற்குள் நான் செல்லவில்லை.

ஒரு நடிகையை இரண்டு தனிப்படைகளை அமைத்து காவல் துறை பிடித்திருக்கிறார்கள். ஒரு நடிகையை பிடிக்க இவ்வளவு செய்யும்போது, அமைச்சர் செந்தில் பாலாஜி சிறைக்கு சென்று வந்து ஒரு வருடங்களுக்கும் மேல் ஆகியும் அவரது தம்பியை காவல் துறையினரால் இன்னும் பிடிக்க முடியவில்லையே. முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கீழ் இருக்கும் காவல்துறை. இதற்கு மேல் என்ன கூறுவது.

ஆக மொத்தம் இந்த அரசை மாற்ற வேண்டும் என்று மக்கள் முடிவுடன் இருக்கின்றனர்.

எத்தனை நாட்களுக்கு முன்னால் தேர்தல் பணிகளை ஆரம்பித்தாலும் வருகின்ற சட்டசபை தேர்தலில் திமுகவையும் அதன் கூட்டணி கட்சிகளையும் மக்கள் முடிவுக்கு கொண்டு வந்துவிடுவார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆட்சிக்கு எதிராக மக்கள் கொதித்தெழும் நாள் வெகு தொலைவில் இல்லை: அன்புமணி ராமதாஸ்



சென்னை, நவ.23

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டத்தில்உள்ளஒருகிராமத்தைச் சேர்ந்த 13 வயது சிறுமி அப்பகுதியைச் சேர்ந்த மது போதையில் இருந்த 3 மனித மிருகங்களால் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. திராவிட மாடல் ஆட்சியில் குழந்தைகளுக்குக் கூட பாதுகாப்பற்ற சூழல் உருவாக்கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

இரவு நேரத்தில் இயற்கையின் அழைப்புக்காக வீட்டிற்கு அருகில் உள்ள புதர் பகுதிக்கு சென்ற சிறுமியை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த மூவர் தூக்கிச் சென்று அருகில் உள்ள கல்குவாரியில் வைத்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். சிறுமியைக் காணாமல் தேடிய அவரது தந்தை அருகில் உள்ள கல்குவாரியிலிருந்து குழந்தையின் அழுகுரல் கேட்டு ஓடிச் சென்று காப்பாற்றியுள்ளார். இது குறித்து அப்பகுதியில் உள்ள காவல்நிலையத்தில் சிறுமியின் தந்தை அளிக்க புகாரை வாங்க மறுத்த காவலர்கள், இன்னொரு காவல் நிலையத்தில் புகார் அளிக்கும்படி கூறியுள்ளனர். அங்கும் புகார் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில், சிறுமியின்உறவினர்கள்போராட்டம் நடத்தியதற்கு பிறகு தான் முதல் காவல் நிலையத்தில் புகார் பெறப்பட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் அரசு மருத்துவமனையின் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு இல்லை, அரசு பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு இல்லை, நீதிமன்றங்களில் வழக்காடும் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இவை அனைத்தையும் கடந்து 13 வயது சிறுமிக்கு அவர் வாழும் வீட்டுக்கு அருகிலேயே பாதுகாப்பு இல்லை என்றால் தமிழ்நாட்டில் எவ்வளவு மோசமான ஆட்சி நடைபெறுகிறது? அதைவிடக் கொடுமை என்னவென்றால், இத்தகைய குற்றச்சம்பங்கள் நடக்காமல் தடுத்திருக்க வேண்டிய காவல்துறை, சிறுமிக்கு இழைக்கப்பட்ட கொடுமை குறித்த புகாரைக் கூட வாங்காமல் அவரது குடும்பத்தினரை அலைக்கழித்திருக்கிறது.

அனைத்துக் குற்றங்களுக்கும் மூல காரணம் மது மற்றும் போதைப் பழக்கங்கள் தான்; அதனால் அவற்றுக்கு முடிவு கட்டுங்கள் என்று தமிழக அரசை பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், ஒருபுறம் போதையின் பாதையை தவிருங்கள் என்று கூறிக்கொண்டு இன்னொரு புறம் மது வணிகத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இது தான் மக்கள் நலன் காக்கும் அரசுக்கான இலக்கணமா? என்பது தெரியவில்லை. சிறுமியை வன்கொடுமை செய்த குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை பெற்றுத் தருவதுடன், மதுக்கடைகளை உடனடியாக மூடவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் யாருக்கும் பாதுகாப்பு இல்லாத ஆட்சி தான் நடைபெற்று வருகிறது. கூட்டுப் பாலியல் வன்கொடுமையிலிருந்து சிறுமியை பாதுகாப்பதற்குக் கூட திறனற்ற அரசு தொடர்ந்து பதவியில் நீடிக்க எந்தத் தகுதியும் இல்லை. தமிழக அரசுக்கு எதிராக மக்கள் பொறுமையிழந்து கொண்டிருக்கின்றனர். வெகு விரைவிலேயே அவர்கள் கொதித்தெழுவார்கள்.... அரியலூர் ரெயில் விபத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அன்றைய ரெயில்வேத் துறை அமைச்சர் அழகேசனுக்கு எதிராக திமுகவினர் முழக்கிய வாசகங்களை இன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் முழங்குவார்கள். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை.

# கடன் தொகை செலுத்தாதவரின் வீட்டில் பெயிண்டால் எழுதிய நிதி நிறுவன ஊழியர்கள்... தற்கொலைக்கு முயன்ற நபர்

புதுக்கோட்டை, நவ.23

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை பகுதியை சேர்ந்த சகோதரர்கள் பால கிருஷ்ணன், சக்திவேல். இவர்கள் இருவரும் விவசாயம் செய்து வருவதோடு, ஆடு வளர்த்து விற்கும் தொழிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பால கிருஷ்ணன் தனது மகளின் திருமணத்திற்காக ஒரு நிதி நிறுவனத்தில் ரூ.10 லட்சம் கடன் பெற்றுள்ளார். 19 மாதம் தவணையாக அந்த கடன் தொகையை திருப்பி செலுத்த வேண்டும். 15 மாத தவணை தொகை அவர் சரியாக செலுத்தி உள்ளார். ஆனால் கடந்து 3 மாதங்களாக தவணை செலுத்தவில்லை.

இதே போல சக்திவேல் மற்றொரு நிதி நிறுவனத்தில் கடன் பெற்றுள்ளார். அவரும் சரியாக தவணை செலுத்தி வந்த நிலையில் கடந்த 3 மாதங்களாக தவணை தொகை செலுத்தவில்லை.

இதன் காரணமாக கடன் தொகையை வசூலிக்க வந்த நிதி நிறுவன ஊழியர்கள் பாலகிருஷ்ணன், சக்திவேலுக்கு சொந்தமான வீட்டில் பெரிய அளவில் இந்த வீடு அடமானத்தில் உள்ளது. 3 மாத நிலுவை ரூ.45,204 செலுத்தப்படவில்லை என்று கொட்டை எழுத்தில் எழுதிவிட்டு சென்றுள்ளனர். இதனை கண்ட அந்த கிராம மக்கள் தினம்தோறும் துக்கம் விசாரிப்பது போல அந்த வீட்டிற்கு வந்து விசாரணை செய்து சென்றுள்ளனர்.

அவமானத்தால் மனமுடைந்த சக்திவேல் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். அக்கம் பக்கத்தினர் அவரை தடுத்து நிறுத்தி புத்தி சொல்லி வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்து உள்ளனர். பால கிருஷ்ணனின் மனைவி அவமானம் தாங்க முடியாமல் தனது தாய் வீட்டிற்கு சென்று விட்டார்.

பாலகிருஷ்ணன் தற்போது தனது வீட்டிற்கு வராமல் வெளியிலேயே சுற்றி திரிகிறார்.

இது குறித்து சக்திவேல் கூறும்போது, தவணை தொகையை சரியான காலத்தில் செலுத்தி வந்தோம். கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக எங்களது தாயாரின் உடல் நிலை கடுமையான பாதிப்பிற்கு உள்ளானது. இதன் காரணமாக அவரை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்ததால், வைத்திருந்த பணம் மருத்துவத்திற்காக செலவிடப்பட்டு விட்டது. 3 மாத தவணையை எப்படியும் செலுத்தி விடுவோம் என்று நாங்கள் பணம் வசூலிக்கும் நிதி நிறுவன ஊழியரிடம் கெஞ்சினோம். ஆனால் அவர்கள் இவ்வாறு எங்களை அவமானப்படுத்தி விட்டு சென்று விட்டனர்.

இவ்வாறு அவர் கண்ணீருடன் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து வழக்கறிஞர் ஒருவர் கூறும்போது, தவணை தொகை செலுத்தவில்லை என்றால்நிதிநிறுவனங்கள் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இது போன்ற அநாகரீகமான செயல்களில் அவர்கள் ஈடுபடக்கூடாது.

இது மிகவும் தவறு. சட்டப்படி அவர்கள் மீது வழக்கு தொடரலாம் என்று அவர் கூறினார்.

# போலி டாக்டரிடம் சிகிச்சை பெற்ற இளம்பெண் மரணம்: குழந்தை பிறந்த 20 நாளில் சோகம்



கொடைக்கானல், நவ.23

கொடைக்கானல் அருகில் உள்ள கவுஞ்சி ராஜபுரத்தை சேர்ந்தவர் சர்வேஸ் (வயது 30) விவசாய கூலித்தொழிலாளி. இவரது மனைவி பிரியதர்ஷினி (24). இவர்களுக்கு ஏற்கனவே 2 வயதில் 1 ஆண் குழந்தை உள்ளது. இந்நிலையில் மீண்டும் கருவுற்ற பிரியதர்ஷினி கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 20 நாட்களுக்கு முன்பு அறுவை சிகிச்சை மூலம் பெண் குழந்தை பிறந்தது. அதன் பிறகு அவர் வீடு திரும்பினார்.

சில நாட்களிலேயே பிரியதர்ஷினிக்கு வயிற்று வலி ஏற்படவே அதே பகுதியில் மருந்தகம் நடத்தி வரும் பிரின்ஸ் என்பவரிடம் சிகிச்சைக்கு சென்றார். அவருக்கு மருந்து மாத்திரைகளை பிரின்ஸ் வழங்கி உள்ளார். இவர் முறையான மருத்துவம் படிக்காமல் தனது வீட்டிலேயே கிளீனிக் போல நடத்தி அப்பகுதி மக்களுக்கு மருந்து மாத்திரைகள் கொடுத்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று மீண்டும் பிரியதர்ஷினிக்கு வயிற்று வலி ஏற்படவே பிரின்ஸிடம் சிகிச்சைக்கு வந்துள்ளார்.

அவர் வலி குறைவதற்காக அதிக வீரியம் கொண்ட ஊசியை அவருக்கு செலுத்தினார். சற்று நேரத்தில் பிரியதர்ஷினிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்தபோது அவர் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து கொடைக்கனால் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் அவரது உடலை கைப்பற்றி திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் அவருக்கு சிகிச்சை அளித்த பிரின்சை தேடி வருகின்றனர். அவர் முறையான மருத்துவம் படிக்காமல் பல வருடங்களாக கிராம மக்களுக்கு வைத்தியம் பார்த்து வந்துள்ளார். தற்போது அவரது சிகிச்சையால் ஒரு பெண் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து அங்கு போலீசார் மற்றும் மருத்துவ துறையினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

போலி டாக்டர்கள் கொடைக்கானல் மலை கிராமங்களில் இதுபோல பல்வேறு இடங்களில் கிளீனிக் வைத்து செயல்படுகின்றனர். அரசு ஆஸ்பத்திரிக்கு நீண்ட தூரம் செல்லவேண்டும் என்பதால் அருகில் கிடைக்கும் மருத்துவத்தை அப்பகுதி கிராம மக்கள் எடுத்து வருகின்றனர். இவர்களுக்கு ஒருசில டாக்டர்களும் உதவி வருவதாக கூறப்படுகிறது.

இதனால் மாவட்ட கலெக்டர் உடனடியாக தலையிட்டு கொடைக்கானல் மலை கிராமங்களில் போலி டாக்டர்களின் நடமாட்டத்தை கண்டறிந்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

# தஞ்சை காமராஜ் காய்கறி மார்க்கெட் வியாபாரிகள் திடீர் ஆர்ப்பாட்டம்




தஞ்சாவூர், நவ.23

தஞ்சாவூர் மாநகரின் மையப்பகுதியில் காமராஜ் காய்கறி மார்க்கெட் அமைந்துள்ளது. இந்த மார்க்கெட்டில் சிறிய கடைகள் 200, பெரிய கடைகள் 300 என 500க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன.

இதில் பெரிய கடைகளுக்கு மாதந்தோறும் ரூ.18 ஆயிரம் வரையும், சிறிய கடைகளுக்கு ரூ.6000 வரையும் மாநகராட்சி சார்பில் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இருந்த போதிலும் கடைகளுக்கு வாடகை அதிகமாக உள்ளது எனவும் அதனைக் குறைக்க வேண்டும் என வியாபாரிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் காமராஜ் மார்க்கெட்டில் சில கடை வியாபாரிகள் சில மாதங்களாக வாடகை செலுத்தவில்லை என கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து வாடகை செலுத்தாத கடைகளின் மின் இணைப்பை மாநகராட்சி அதிகாரிகள் துண்டித்தனர்.

கால அவகாசம் வழங்காமல் மாநகராட்சி அதிகாரிகள் எப்படி மின் இணைப்பை துண்டிக்கலாம்? எனக் கூறி இன்று காமராஜ் மார்க்கெட் வியாபாரிகள் ஒன்று திரண்டு திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் முன்னறிவிப்பு இன்றி மாநகராட்சி அதிகாரிகள் மின் இணைப்பை துண்டித்ததை கண்டித்தும், ஓராண்டுக்கான வாடகையை மொத்தமாக செலுத்த வேண்டும் என கூறியதை கண்டித்தும், கடை வாடகைகளை குறைக்க கோரியும் கோஷங்கள் எழுப்பினர்.

வியாபாரிகளின் இந்த திடீர் ஆர்ப்பாட்டத்தால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. தகவல் அறிந்து தஞ்சை மேற்கு போலீசார் உடனே விரைந்து வந்து வியாபாரிகளிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து வியாபாரிகள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஜனாதிபதி திரவுபதி முர்மு 27ந்தேதி நீலகிரி வருகை: கண்காணிப்புகள் தீவிரம்



ஊட்டி, நவ.23

திருவாரூர் மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மற்றும் நீலகிரி மாவட்டம் குன்னூர் ராணுவ கல்லூரியில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க ஜனாதிபதி திரவுபதி முர்மு வருகிற 27ந்தேதி தமிழகம் வருகிறார்.

இதற்காக அவர் அன்றைய தினம் காலை டெல்லியில் இருந்து விமானம் மூலம், கோவை சூலூர் விமானப்படை தளத்திற்கு வருகிறார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி தீட்டுக்கல் பகுதிக்கு செல்கிறார்.

அங்கிருந்து கார் மூலம் ஊட்டியில் உள்ள ராஜ்பவனுக்கு செல்லும் ஜனாதிபதி திரவுபதி முர்மு அங்கு தங்கி ஓய்வெடுக்கிறார்.

மறுநாள் 28ந் தேதி (வியாழக்கிழமை) காலை ஜனாதிபதி ஊட்டி ராஜ்பவனில் இருந்து கார் மூலமாக குன்னூருக்கு செல்கிறார்.

ராணுவ அதிகாரிகள் பயிற்சி பெறும் கல்லூரிக்கு செல்லும் அவர் அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்று பயிற்சி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகிறார். நிகழ்ச்சி முடிந்ததும் மீண்டும் ஊட்டி ராஜ்பவன் சென்று தங்குகிறார்.

29ந்தேதி (வெள்ளிக்கிழமை) ஊட்டி ராஜ்பவனில் நீலகிரி வாழ் பழங்குடி மக்களை ஜனாதிபதி திரவுபதி முர்மு சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது.

ஊட்டி நிகழ்ச்சிகளை முடித்து கொண்டு வருகிற 30ந்தேதி (சனிக்கிழமை) ஹெலிகாப்டர் மூலம் கோவை வந்து, அங்கிருந்து விமானம் மூலமாக திருச்சி விமான நிலையத்திற்கு செல்கிறார்.

பின்னர் அங்கிருந்து திருவாரூர் சென்று, அங்கு தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் நடக்க உள்ள பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்குகிறார். பட்டமளிப்பு முடிந்ததும், மீண்டும் திருச்சி வந்து, அங்கிருந்து விமானம் மூலமாக டெல்லி பயணிக்கிறார்.

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் மாவட்ட எஸ்.பி. நிஷா, மாவட்ட வன அலுவலர் கவுதம் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

போலீசார் சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, பொதுப்பணித் துறை சார்பில் ராஜ்பவனில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வது, நகராட்சிசார்பில்தூய்மை பணி மேற்கொள்வது, சாலை சீரமைப்பு செய்வது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்த நிலையில், தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தை சீரமைக்கும் பணிகள் நேற்று தொடங்கியது. அங்கு ஹெலிகாப்டர் தளம் தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் போலீசார், வெடிகுண்டு நிபுணர்கள் ஹெலிகாப்டர் தளத்தில் மெட்டல் டிடெக்டர் உதவியுடன் அங்குலம், அங்குலமாக சோதனையும் மேற்கொண்டனர். அங்கு 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசாரும் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தை சுற்றியுள்ள பகுதியில் வெளியாட்கள் நுழையவும் போலீசார் தடைவிதித்தனர்.

ஜனாபதி வருகையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் 750க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடஉள்ளனர். இதற்கான முன்னேற்பாடு பணிகளை போலீசார் மேற்கொண்டு வருகிறார்கள்.

தீட்டுக்கல், படகு இல்லம், ஹல்பங்க், கலெக்டர் அலுவலகம், ராஜ்பவன் வரையிலான சாலை சீரமைப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சாலையோரமுட்புதர்கள் அகற்றப்பட்டு, சரி செய்யப்பட்டு வருகின்றன. தாவரவியல் பூங்காவிலும் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

ஜனாதிபதி வருகையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சோதனை சாவடிகளிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்த ப்பட்டுள்ளது. அந்த வழியாக வரும் வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வாகனங்களில் வருபவர்களிடம் உரிய விசாரணை நடத்தி, அவர்களின் அடையாள அட்டைகளை எல்லாம் வாங்கி பார்த்து சோதித்த பின்னரே மாவட்டத்திற்குள் அனுமதிக்கின்றனர்.

# கொலை செய்யப்பட்ட ஆசிரியை குடும்பத்திற்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் நிவாரணம் அமைச்சர் வழங்கினார்



பட்டுக்கோட்டை, நவ.23

தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் அரசு பள்ளி வளாகத்தில் ஆசிரியை ரமணி குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த கொடூர செயலில் ஈடுபட்ட மதன்குமாரை போலீசார் கைது செய்தனர்.

இந்த நிலையில் கொலை செய்யப்பட்ட ரமணியின் குடும்பத்திற்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

அதன்படி இன்று முதலமைச்சர் உத்தரவுப்படி பட்டுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் ரமணியின் பெற்றோரிடம் ரூ.5 லட்சத்திற்கான காசோலையை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்.

அப்போது முரசொலி எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் அண்ணாதுரை, அசோக்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## "நானும் மதுரைக்காரன் தான்டா" போதையில் வாலிபர் ரகளை





கொடைக்கானல், நவ.23


கொடைக்கானலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இங்கு முக்கிய சுற்றுலா இடமாகவும், சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடமாகவும் நட்சத்திர ஏரி அமைந்துள்ளது.

இந்தநிலையில் நேற்று நட்சத்திர ஏரியில், வாலிபர் ஒருவர் நீச்சல் அடித்து கொண்டு இருந்தார். இதையடுத்து அருகில் இருந்தவர்கள் மற்றும் படகு ஓட்டுனர்கள் அவரை வெளியே வருமாறு சத்தம் போட்டனர். இதையடுத்து வெளியே வந்த வாலிபர் பொதுமக்களிடம் தகராறில் ஈடுபட்டார்.

அப்போது, காப்பாற்ற வந்தவர்களை பார்த்து நானும் "மதுரைக்காரன்டா"என பேசிய வாலிபரிடம்.. ஊருக்கு கிளம்பு என்று சொன்னவுடன் அழுதார். இதையடுத்து போதையில் குளிரில் நடுங்கிய வாலிபருக்கு டீ வாங்கிக்கொடுத்து தெளிய வைத்தனர் காவல் துறையினர் .

இதையடுத்து விசாரணையில் அவர் மதுரை காளவாசல் பகுதியை சேர்ந்தவர் என்று தெரிய வந்தது. மேலும் கொடைக்கானலுக்கு சுற்றுலா வந்த இவர், நட்சத்திர ஏரியில் குதித்து நீச்சல் அடித்ததாக கூறினார். பின்னர் போலீசார் அவருக்கு அறிவுரை கூறி, சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## வடிகஞ்சி கொட்டியதில் உடல் வெந்து சிறுமி உயிரிழப்பு



திருவள்ளூர், நவ.23

கும்மிடிப்பூண்டியில் அடுப்பில் இருந்து சாதத்தை வடிக்கும் போது வடிகஞ்சி உடலில் கொட்டியதில் வடமாநில சிறுமி பரிதாபமாக பலியானார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த சிப்காட் தொழிற்பேட்டையில்பீகார்மாநிலத்தை சேர்ந்த ரவிதாஸ் என்பவர் வேலை பார்த்து வருகிறார். இவருடைய 16 வயது மகள் நந்தினி கடந்த 14ம் தேதி வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்தார்.

அப்போது, அடுப்பில் இருந்து சாதத்தை வடிக்கும்போது, எதிர்பாராதவிதமாக கொதிக்கும் வடிகஞ்சி அவர் மேல் கொட்டியது.

இதில் படுகாயமடைந்து அலறிய அவரை பெற்றோர் மீட்டு சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்த்தனர். ஒரு வாரமாக சிகிச்சையில் இருந்த நந்தினி நேற்று சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தசம்பவம் புதுப்பேட்டை பகுதியில் வசிக்கும் வடமாநில குடும்பத்தினர் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## பாம்பன், மண்டபம்: 4 நிவாரண முகாம்கள் அமைப்பு




ராமநாதபுரம், நவ.23

பாம்பன் மற்றும் மண்டபம் பகுதிகளில் மொத்தம் 4 நிவாரண முகாம்களில் 190 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். முகாம்களில் உள்ளவர்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 11 மருத்துவக் குழுக்கள் அமைத்து, இன்று 52 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 789 பேர் பயனடைந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்துக்கு மீட்பு, நிவாரண பணி ஒருங்கிணைப்பு கண்காணிப்பு அலுவலராக ஐஏஎஸ் அதிகாரி வள்ளலார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மண்டல அளவிலான மீட்பு மற்றும் நிவாரண குழுக்கள் அமைக்கப்பட்டு நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு; களக்காடு தலையணையில் குளிக்க 7வது நாளாக தடை



களக்காடு, நவ.23

களக்காடு பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் தண்ணீர் வரத்து அதிகரித்ததையடுத்து களக்காடு தலையணையில் குளிக்க 7வது நாளாக தடை நீடிக்கப்பட்டுள்ளது. திருக்குறுங்குடி திருமலை நம்பி கோயிலுக்கும் செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் பரவலாக வடகிழக்கு பருவ மழை பெய்து வருகிறது. களக்காடு பகுதியிலும் தொடர் மழை பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை தீவிரமடைந்துள்ளது. இதனைத்தொடர்ந்து களக்காடு தலையணையில் கடந்த 15ம்தேதி முதல் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் தலையணையில்குளிக்க15ம்தேதி முதல் சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்தனர்.

இந்நிலையில் கடந்த இரு நாட்களாக பெய்து வரும் மழையினால் தலையணையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தடுப்பணையை மூழ்கடித்தவாறு பேரிறைச்சலுடன் காட்டாற்று வெள்ளம் பாய்ந்தோடுகிறது. இதனைத்தொடர்ந்து அங்கு குளிக்க நேற்று 7வது நாளாக தடை நீடிக்கப்பட்டது.

அதேநேரத்தில் தலையணையை சுற்றி பார்க்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் திருக்குறுங்குடி மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்து வரும் சாரல் மழையினால் வனப்பகுதியில் ஓடும் நம்பியாற்றிலும் நீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதையடுத்து வனப்பகுதியில் உள்ள 108வைணவதிவ்யதேசங்களில் ஒன்றாக திகழும் திருமலைநம்பி கோயிலுக்கு பக்தர்கள் செல்லவும், நம்பியாற்றில் குளிக்கவும் தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டது. களக்காடு பகுதியில் இன்று காலை நிலவரப்படி 8.80 மி.மீ மழையளவு பதிவாகியுள்ளது.

## கழிவுநீர் குட்டையில் பாய்ந்த கார்; அண்ணனின் சாவுக்கு சென்று திரும்பிய சென்னை பெண் விபத்தில் பலி



திண்டிவனம், நவ.23

அண்ணனின் இறுதி சடங்கிற்கு சென்று திரும்பும்வழியில்சாலையோர கழிவுநீர் பள்ளத்தில் கார் கவிழ்ந்து சென்னையை சேர்ந்த பெண் இறந்தார். சென்னை அசோக்நகரை சேர்ந்தவர் சிலுவைமேரி (65). இவரது அண்ணன் சவுரிமுத்து (80) கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்த இருந்தை கிராமத்தில் நேற்று உயிரிழந்தார்.

இவரது இறுதி சடங்கிற்காக சென்னையில் இருந்து சிலுவைமேரி மற்றும் அவரது உறவினர்களான செல்வராஜ் (80), அருள் தேவகுமார் (28), விக்டோரியா (30), ஆரோக்கியசெல்வி (35) ஆகியோர் ஒரு காரில் புறப்பட்டனர். காரை அருள் தேவகுமார் ஓட்டி வந்தார். நேற்று மாலை இறுதி சடங்கை முடித்து விட்டு மீண்டும் சென்னைக்கு காரில் திரும்பிக்கொண்டிருந்தனர்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த சலவாதி கூட்டுசாலை அருகே இரவு 9 மணி அளவில் சாலையோர ஓட்டலில் உணவு சாப்பிட முடிவு செய்த தேவகுமார், காரை இடது புறமாக திருப்பியபோது சாலை விரிவாக்க பணிக்காக தோண்டப்பட்ட கழிவு நீர் குட்டைக்குள் கார் கவிழ்ந்து நீரில் மூழ்கியது.

இதனால் காரில் பயணம் செய்த அனைவரும் கூச்சல் இட்டனர். சத்தம் கேட்டதும் அருகில் இருந்தவர்கள் ஓடிச் சென்று நீரில் மூழ்கியவர்களை காப்பாற்றி சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி சிலுவைமேரி உயிரிழந்தார். மற்ற 4 பேருக்கும் லேசான காயம் என்பதால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

## ஆரணி அருகே 7 குழந்தைகளை வெறி நாய் கடித்ததால் பரபரப்பு

தி.மலை, நவ.23

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே 7 குழந்தைகளை வெறி நாய் கடித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. குழந்தைகளை மீட்டு, ஆரணி அரசு மருத்துவமனையில் அனுமதித்து, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளை கடித்துக் குதறிய வெறி பிடித்த நாயை பிடிக்க, பெற்றோர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கன்னியாகுமரி, வேளாங்கண்ணி நேரடி ரெயில்: தெற்கு ரெயில்வேயிடம் விஜய் வசந்த் கோரிக்கை



கன்னியாகுமரி, நவ.23

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

★ தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவானது.

★ மேற்குவடமேற்கு நோக்கி நகர்ந்து நாளை மறுநாள் தென்கிழக்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறும்.

★ காற்றழுத்த தாழ்வுப்பகுதி தென்மேற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்பு உள்ளது.

★ காற்றழுத்த தாழ்வு மண்டலம் தமிழ்நாடுஇலங்கை கடற்கரைகளை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

## மத்திய சென்னை மேற்கு மாவட்ட தே.மு.தி.க. புதிய நிர்வாகிகள் நியமனம் பிரேமலதா அறிவிப்பு



கன்னியாகுமரி, நவ.23

கன்னியாகுமரி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த் எம்பி சென்னையில் உள்ள தெற்கு ரெயில்வே துறை பொது மேலாளர் மற்றும் முதன்மை செயல் மேலாளர் ஆகியோரை சந்தித்து கன்னியாகுமரி மக்கள் சார்பில் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

அதில் கூறியிருப்பதாவது: வேளாங்கண்ணிக்கு நேரடி ரெயில் சேவை ஏற்படுத்தி தர வேண்டும். மேலும் நாகர்கோவில் திருவனந்தபுரம் மெமு ரெயிலை திருநெல்வேலி வரை நீட்டிக்க வேண்டும்.

இரணியல் ரெயில் நிலையம் மேம்பாலத்தில் போக்குவரத்து ஒழுங்குபடுத்த அந்த மேம்பாலத்தின் கட்டமைப்பை திருத்தி அமைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## செல்வபெருந்தகையுடன் கன்னியாகுமரியில் கண்ணாடி பாலத்தை ஆய்வு செய்த விஜய் வசந்த்



சென்னை, நவ.23

தே.மு.தி.க. மத்திய சென்னை மேற்கு மாவட்டத்துக்கு புதிய நிர்வாகிகளை மாவட்ட செயலாளர் இ.ஆர்.எஸ். பிரபாகரன் பரிந்துரையின் பேரில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ளார்.

இளைஞர் அணி செயலாளராக குலசேகரன், துணை செயலாளராக சிவா, மோகன், கேப்டன் மன்ற செயலாளராக தனசேகரன், துணை செயலாளர்களாக பாஸ்கர், கலைமணி, கிருஷ்ணமூர்த்தி, மகளிர் அணி செயலாளராக சல்லத்மேரி, துணை செயலாளர்களாக ஷியாமா சிவஸ்ரீ, பாலகுமாரி, மாணவர் அணி செயலாளராக பாபு, துணைச் செயலாளர்களாக ஆகாஷ், பாலாஜி, வழக்கறிஞர் அணி செயலாளராக பரமசிவம், துணைச் செயலாளர்களாக பூமாலை, கவிநிலா, சமூக வலைதள அணி செயலாளராக முனிராஜன், துணைச் செயலாளர்களாக இளையராஜ், ஹரிகரன், தொண்டர் அணி செயலாளராக வெங்கடேசன், துணை செயலாளர்களாக ராஜேந்திரன், ராமர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## திருச்செந்தூரில் கடல் சீற்றம்: கடலில் குளித்த 2 பெண்களுக்கு கால் முறிவு



திருச்செந்தூர், நவ.23

வடகிழக்கு பருவமழை காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்செந்தூரிலும் இன்று காலை முதல் மீண்டும் மழை பெய்து வருகிறது. எனினும்திருச்செந்தூர்சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வழக்கம் போல் ஏராளமானவர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

இதற்கிடையே திருச்செந்தூரில் இன்று அதிகாலை முதலே கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. இந்நிலையில் வழக்கம் போல பக்தர்கள் திருச்செந்தூர் கடலில் புனித நீராடினர்.

அப்போது அங்கு புனித நீராடிய காரைக்குடியை சேர்ந்த சிவகாமி (வயது50), சென்னையை சேர்ந்த கீர்த்தனா (40) என்ற 2 பெண்களுக்கு கால் முறிவு ஏற்பட்டது.

இதைதொடர்ந்து 2 பேரையும் கடற்கரை பாதுகாப்பு பணியாளர்கள் பத்திரமாக கடலுக்குள் இருந்து மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## கொடைக்கானலில் பனிப்பொழிவு: வாகன ஓட்டிகள் கடும் அவதி



கொடைக்கானல், நவ.23

கொடைக்கானலில் கடந்தசில நாட்களாக அவ்வப்போது சாரல் மழையும் கடும் பனிமூட்டமும் நிலவி வந்தது. இந்த சூழலை பயணிகள் அனுபவித்து மகிழ்ந்தனர்.

இந்நிலையில் இன்று காலையில் சிறிது நேரம் பனிமூட்டம் நிலவியது. அதனைத் தொடர்ந்து பகல் பொழுதிலும் பனிமூட்டம் நீடித்தது. இதனால் நகர் முழுவதும் வெள்ளைப் போர்வை போர்த்தியது போல பனி மூட்டம் சூழ்ந்துள்ளது. இதனால் இருசக்கர வாகனம் முதல் நான்கு சக்கர வாகனம் வரை முகப்பு விளக்குகளை எரியவிட்டபடியே செல்கிறது. இதன் காரணமாக வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.

நடந்து செல்பவர்கள் மீதும் பனி விழுவதால் உடல் நடுங்கியபடி செல்கின்றனர். தொடர்ந்து பனி மூட்டம் குறையாமல் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அவதியடைந்து வருகின்றனர்.

## ஓசூரில் வக்கீல் வெட்டப்பட்ட சம்பவத்தை கண்டித்து வக்கீல்கள் கோர்ட் புறக்கணிப்பு போராட்டம்




ஓசூர், நவ. 23

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் பட்டப்பகலில் கோர்ட்டு வளாகத்தில் வக்கீல் கண்ணனை, ஆனந்தகுமார் என்பவர் சரமாரி அரிவாளால் வெட்டியுள்ளார். இதனால் வெட்டுகாயம் அடைந்த கண்ணன் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் 10 மணி நேரத்திற்கு மேலாக அறுவை சிகிச்சை அளித்துள்ளனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து ஓசூரில் இன்று வக்கீல்கள் கோர்ட்டு புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோர்ட்டு முன்பு வக்கீல்கள் சங்க தலைவர் ஆனந்தகுமார் தலைமையில் கோரிக்கைகளை வலியுறுத்தி வக்கீல்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதே போல் தமிழகம் முழுவதும் இன்று வக்கீல்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தஞ்சையில் கருணாநிதி நூற்றாண்டு நூலகம் அமைக்கப்படும்: அமைச்சர் கோவி.செழியன் தகவல்



தஞ்சை, நவ.23

தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா நூற்றாண்டு அரங்கில் மாவட்ட மைய நூலகம் மற்றும் வாசகர் வட்டம் சார்பில் 57வது தேசிய நூலக வார விழா நடந்தது

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் தலைமை தாங்கினார். முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், அசோக்குமார், மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு, வாழ்நாள் சாதனையாளர் விருது 8 பேருக்கும், ஆவணக்குரிசில் விருது 7 பேருக்கும், எழுத்துலகின் இளம்பரிதி விருதுகளை 6 பேருக்கும் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

தஞ்சை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட மைய நூலகம், முழு நேர கிளை நூலகம், கிளை நூலகங்கள் என மொத்தம் 54 நூலகங்களில் வைவை வசதி செய்யப்பட்டு வாசகர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை புத்தக விழாவாக வாசிப்பின் விழாவாக நடத்துவது தஞ்சைக்கு கிடைத்த பெருமை.

தமிழ் சமூகத்தை படிப்பதில் ஆர்வம் உடையவர்களாக மாற்றுவதில் பத்திரிகை ஆரம்பித்து விதையாக விதைத்தவர்கள் பெரியார், அண்ணா, கருணாநிதி என்றால் அது மிகையல்ல. இந்தியாவில் தமிழகத்தில் தான் உயர்கல்வி படித்தவர்கள் 47 சதவீதம் பேர் உள்ளனர்

தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினால் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் கருணாநிதி நுற்றாண்டு நூலகம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டது. கோவையில் கலைஞர்கள் நூற்றாண்டு நூலகம் அமைக்க கால்கோள் செய்யப்பட்டுள்ளது. அனைத்து அரசு விழாக்களிலும் நூல்களை பரிசாக வழங்க வேண்டும் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார். ன தஞ்சையிலும் கருணாநிதி நூற்றாண்டு நூலகம் அமைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் சதய விழாக்குழு தலைவர் செல்வம், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம்.ராமச்சந்திரன், மகேஷ்கிருஷ்ணசாமி, ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதீஷ்குமார் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மணவாளன் இளைஞர் அணி அமைப்பாளர் முகில் வேந்தன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ராணி சுப்பிரமணியன் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் எம்.கே.முத்து மாணிக்கம் ஒரத்தநாடு தெற்கு ஒன்றிய செயலாளர் முருகையன் மற்றும் ஒன்றியக்குழு தலைவர்கள், துணைத்தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக வாசகர் வட்ட தலைவர் கோபாலகிருஷ்ணன் வரவேற்றார்.

முடிவில் மாவட்ட நூலக அலுவலர் முத்து நன்றி கூறினார்.

# குழந்தையை தவிக்க விட்டு பேஸ்புக் காதலனை திருமணம் செய்து கொண்ட இளம்பெண்: போலீஸ் ஸ்டேஷனில் பஞ்சாயத்து

சூலூர், நவ.23

குழந்தையை தவிக்க விட்டு பேஸ்புக் காதலனை திருமணம் செய்து கொண்ட இளம்பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது. கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியை சேர்ந்தவர் நந்தகணேஷ் (28). இவர் கூரியர் நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இவருக்கு இன்னும் திருமணமாகவில்லை. மணப்பெண் வேண்டி பல்வேறு திருமணம் தகவல் மையங்களில் பணம் கட்டி பதிவு செய்து வைத்துள்ளார். இவர், வாட்ஸ் அப் மற்றும் பேஸ்புக்கில் அதிக நேரம் செலவிடும் பழக்கம் கொண்டவர். அந்த வகையில் பேஸ்புக் மூலம் இளம்பெண் ஒருவர் இவருக்கு நண்பர் ஆகி உள்ளார்.

பேஸ்புக் மூலம் இருவரும் பழகி வந்த நிலையில் இருவரும் நேரில் பார்க்காமல் காதலித்து வந்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 13ம் தேதி அந்த இளம்பெண் திடீரென நந்தகணேசை தேடி கருமத்தம்பட்டி வந்தார். கருமத்தம்பட்டி நால்ரோட்டில் இருந்து தனது காதலனுக்கு போன் செய்த அந்த இளம்பெண், தங்கள் மீதுள்ள காதலால், நான் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டேன், என்னை திருமணம் செய்து கொள்ளுமாறு நந்தகணேசிடம் கூறி உள்ளார். இதை நம்பிய நந்தகணேஷ் இளம் பெண்ணை தனது வீட்டுக்கு அழைத்து சென்று, அவரை தனது பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைத்ததுடன், இந்த இளம்பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக கூறி உள்ளார். பெற்றோரும் தனது மகனுக்கு அழகான இளம்பெண் கிடைத்துள்ளதாக மகிழ்ச்சி அடைந்து மறுநாள் தங்களது குலவழக்கப்படி கோயிலில் வைத்து உறவினர்கள் முன்னிலையில், திருமணம் செய்து வைத்துள்ளனர்.

திருமணமாகி 4 நாட்கள் ஆன நிலையில் உடுமலை டவுன் காவல் நிலைய போலீசார் உடுமலையில் இளம்பெண் மாயமானது தொடர்பான புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். மேலும் அந்த இளம் பெண்ணுக்கு ஏற்கனவே திருமணமாகி 2 வயதில் குழந்தை இருப்பது விசாரணையில் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் நடத்திய விசாரணையில், அந்த இளம்பெண் கருமத்தம்பட்டியில் உள்ளதாக செல்போன் சிக்னல் மூலம் தெரியவந்தது. உடுமலை டவுன் போலீசார் கருமத்தம்பட்டி காவல் நிலையத்துக்கு சென்றனர்.

உடுமலை போலீசார் கொண்டு வந்த பெண் புகைப்படத்தை கருமத்தம்பட்டி போலீசார் வாங்கி பார்த்தபோது கடந்த 4 நாட்களுக்கு முன் புதுமணப்பெண் அலங்காரத்தில் தாலி கட்டிக் கொண்டு கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்த அந்த இளம் பெண் தான் என உறுதி செய்து கொண்ட போலீசார்,

நந்தகணேஷ் வீட்டுக்கு சென்று அந்த இளம்பெண்ணிடம் நைசாக பேசி காவல் நிலையம் அழைத்து வந்த போலீசார் அந்த இளம் பெண்ணை உடுமலை டவுன் போலீசாரிடம் ஒப்படைத்து அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர். பேஸ்புக் காதலால் திருமணம் செய்து கொண்ட நந்தகணேஷ் ஏமாற்றம் அடைந்து தனது பெற்றோருடன் வீட்டுக்கு சென்றார். இந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

# ஆண்களுக்கான நிரந்தர தழும்பில்லாத நவீன கருத்தடை குறித்து பொதுமக்களுக்கு விளக்கும் வகையிலான விழிப்புணர்வு வாகனம்



பெரம்பலூர், நவ.22

பெரம்பலூர் மாவட்ட மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பாக ஆண்களுக்கான நிரந்தர தழும்பில்லாத நவீன கருத்தடை முகாம் (நவீன வாசக்டமி) இரு வார விழா 21.11.2024 முதல் 04.12.2024 வரை நடத்தப்படுகின்றது.

அதனடிப்படையில், ஆண்களுக்கான நிரந்தர தழும்பில்லாத நவீன கருத்தடை குறித்தும், அதன் பயன்கள் குறித்தும் பொதுமக்களிடையே விளக்கும் வகையில் விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்ப நல நிரந்தர கருத்தடை சிகிச்சை சிறப்பு முகாம் நவம்பர் 21 முதல் டிசம்பர் 4 வரை நடைபெறுகிறது. இந்த நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறை எளியது, தையல் தழும்பு வலியின்றி ஓரிரு நிமிடங்களில் செய்யப்படும். அறுவை சிகிச்சை இல்லை. பாதுகாப்பானது. பக்க விளைவுகள் இல்லை. மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், இந்த நவீன நிரந்தர கருத்தடை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.1100/ம், ஊக்குவிப்போருக்கு ரூ.200/ம் அன்றைய தினமே வழங்கப்படும் என்பன உள்ளிட்ட கருத்துக்களை உள்ளடக்கிய துண்டு பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த விழிப்புணர்வு வாகனத்தில் அலுவலர்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளான பேருந்து நிலையம், வாரச்சந்தைகள் உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று ஆண்களுக்கான நவீன கருத்தடை குறித்தும், அதன் பயன்கள் குறித்தும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊட்டி தாவரவியல் பூங்காவில் கடிகார வடிவ அலங்காரம்: சுற்றுலா பயணிகள் கண்டு ரசிப்பு

ஊட்டி, நவ.23

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் தாவரங்களை கொண்டு அமைக்கப்பட்ட கடிகார வடிவிலான அலங்காரம் சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது. ஊட்டியில் இரண்டாம் சீசன் முடிந்த நிலையில் தற்போது பூங்காவில் உள்ள மலர் செடிகளில் விதைகள் சேகரிக்கும் பணிகள் நடந்து வருவதால் பெரும்பாலான செடிகளில் மலர்கள் இன்றி காணப்படுகிறது.

அதேபோல் மாடங்களில் வைக்கப்பட்டிருந்த மலர் அலங்காரம் அகற்றப்பட்டு விட்டது.

இந்நிலையில், தாவரவியல் பூங்காவில் தாவரங்களைக் கொண்டு கடிகார வடிவிலான அலங்காரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்காரம் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் இந்த கடிகார அலங்காரத்தின் முன் நின்று புகைப்படங்களை எடுத்துச் செல்கின்றனர். ஆண்டு முழுவதும் இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க வாய்ப்புள்ளது.

# ரஜினி, கமல், விஜய்க்கு பிறகு... 'அமரன்' மூலம் வரலாறு படைத்த சிவகார்த்திகேயன்



மறைந்த ராணுவ வீரர் மேஜர் முகுந்தின் வாழ்க்கையைத் தழுவி உருவாகிய 'அமரன்' படம் கடந்த தீபாவளியன்று வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதில், சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர். அமரன் படம் ரூ.250 கோடிக்கு மேல் வசூலித்துள்ளநிலையில், ரஜினிகாந்த், கமல்ஹாசன் மற்றும் விஜய்க்கு பிறகு ரூ. 250 கோடிக்கு மேல் வசூல் செய்த படத்தை கொடுத்த நான்காவது தமிழ் நடிகர் என்ற வரலாறை சிவகார்த்திகேயன் படைத்துள்ளார். பல நட்சத்திரங்கள் நடித்திருந்த பொன்னியின் செல்வன் இந்த சாதனையை படைத்திருந்தாலும், சிவகார்த்திகேயன் தனிஒருவராகமுக்கியகதாபாத்திரத்தில்நடித்துஇதனைசெய்துள்ளதால்4வதுநடிகராககருதப்படுகிறார்.திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'அமரன்' விரைவில் ரூ.300 கோடி வசூலை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கதாநாயகனாக இல்லை...இயக்குனராக அறிமுகமாகும் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான்



பிரபல பாலிவுட் நடிகர் ஷாருக்கான். இவரது மகன் ஆர்யன் கான். இவர் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமாவார் என எதிர்பார்த்திருந்தநிலையில், தற்போது இயக்குனராக அறிமுகமாக உள்ளதாக அறிவித்துள்ளார்.

அதன்படி, நெட்பிலிக்ஸ்ல் வெளியாகவுள்ள ஒரு வெப்தொடரை ஆர்யன் கான் எழுதி இயக்குகிறார். இன்னும் பெயரிடப்படாத இந்த வெப் தொடர், அடுத்த ஆண்டு வெளியாக இருக்கிறது. இந்த வெப் தொடரை ஷாருக்கவுரி கானின் ரெட் சில்லிஸ் நிறுவனம் நெட்பிளிக்ஸ் உடன் இணைந்து தயாரிக்கிறது.

# 'என் அன்பு சகோதரா... 'கங்குவா' படத்தை பார்த்த நடிகர் மாதவன் பதிவு




நடிகர் சூர்யா நடிப்பில் இயக்குனர் சிவா இயக்கத்தில் கடந்த 14ம் தேதி வெளியான படம் 'கங்குவா'. இதுவரை ரூ.130 கோடிக்கும் மேல் வசூலித்துள்ள இப்படத்தில் அதீத சத்தம், 3 டி காட்சிகள் , நகைச்சுவை காட்சிகள் உள்ளிட்டவை குறித்து விமர்சனங்கள் எழுந்தன. மேலும், சூர்யாவையும் பலர் விமர்சித்து வந்தனர். இதற்கு நடிகை ஜோதிகா உள்ளிட்ட பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் 'கங்குவா' படத்தை பார்த்த நடிகர் மாதவன் படக்குழுவை பாராட்டியுள்ளார். இது குறித்து அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"நேற்று இரவு கங்குவாவை திரையில் பார்த்தேன், உங்களின் முயற்சிகளையும் அர்ப்பணிப்பையும் கண்டு வியப்படைந்தேன் என் அன்பு சகோதரா.. நீங்கள் செய்ததில் பாதியையாவது நான் செய்ய விரும்புகிறேன். அற்புதமான முயற்சி' இவ்வாறு தெரிவித்துள்ளார்

நடிகர் மாதவன், தற்போது அதிர்ஷ்டசாலி படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை தனுஷ் நடிப்பில் வெளியான திருச்சிற்றம்பலம் பட இயக்குனர் மித்ரன் ஆர் ஜவகர் இயக்குகிறார்.

# கன்னட இயக்குனரை துப்பாக்கியால் சுட்ட நடிகர் கைது



பெங்களூரு சந்திரா லே அவுட்டை சேர்ந்தவர் தாண்டேஸ்வர்(36). கன்னட சின்னத்திரை தொடர்களில் நடித்துள்ள இவர், 'ஜோடி ஹக்கி' என்ற திரைப்படத்திலும் நடித்திருக்கிறார். இதனையடுத்து, சொந்தமாக படம் தயாரிக்க விரும்பி, பிரபல கன்னட இயக்குனர் பரத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ரூ.6 லட்சம் கொடுத்திருக்கிறார். ஆனால், படப்பிடிப்பு பணிகளை துவங்காமல், பரத் இழுத்தடித்து வந்துள்ளார். இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை பசவேசுவரா படாவனேயில் உள்ள வீட்டில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அப்போது ஏற்பட்ட தகராறில் கோபமடைந்த தாண்டேஸ்வர் காரில் இருந்த கை துப்பாக்கியை எடுத்து வந்து பரத்தை நோக்கி சுட்டார். ஆனால் அவர் மீது குண்டு பாயவில்லை. வீட்டின் சுவரில் குண்டு துளைத்தது. இதனையடுத்து, அங்கிருந்து தப்பிய பரத், சந்திரா லேஅவுட் போலீசில் புகார் செய்தார். புகாரையடுத்து, தாண்டேஸ்வரை கைது செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஐபிஎல் ஏலத்தில் எந்த அணிக்கு செல்ல போகிறீர்கள் ? போட்டியின்போது பண்ட்டிடம் கேள்வி கேட்ட லியோன்



ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'பார்டர்கவாஸ்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் பும்ரா முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தார். அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி இந்தியா முதல் இன்னிங்சில் 150 ரன்களில் சுருண்டது. இந்திய அணியில் சிறப்பாக விளையாடிய நிதிஷ் ரெட்டி 41 ரன்களும், ரிஷப் பண்ட் 37 ரன்களும் எடுத்தனர் ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்டுகளும், ஸ்டார்க், கம்மின்ஸ் மற்றும் மார்ஷ் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனையடுத்து ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சை விளையாடி வருகிறது.

இந்த நிலையில் இந்த போட்டியின் போது ரிஷப் பண்ட்டிடம்..டிடம் ஐபிஎல் ஏலத்தில் எந்த அணிக்கு செல்ல போகிறீர்கள் என ஆஸ்திரேலிய வீரர் நாதன் லியோன் கேள்வி எழுப்பினார் இதற்கு பதிலளித்த பண்ட் எந்த யோசனையும் இல்லை என தெரிவித்தார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் அதிகம் வைரலாகி வருகிறது . ஐபிஎல் ஏலம் வரும் 24,25ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

# 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்த ரிஷப் பண்ட்



இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்று முதல் இன்னிங்சை விளையாடிய இந்திய அணி 150 ரன்களில் சுருண்டது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 41 ரன்களும், பண்ட் 37 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலியாவும் 42 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது. முன்னதாக ரிஷப் பண்ட் இந்த இன்னிங்சில் அடித்த ரன்களையும் சேர்த்து டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலிய மண்ணில் இதுவரை 661 ரன்கள் அடித்துள்ளார். இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆஸ்திரேலிய மண்ணில் அதிக ரன்கள் அடித்த வெளிநாட்டு விக்கெட் கீப்பர் என்ற மாபெரும் சாதனையை ரிஷப் பண்ட் படைத்துள்ளார்.

# முகமது ஷமி எப்போது அணிக்கு திரும்புவார்..? கேப்டன் பும்ரா பதில்



ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'பார்டர்கவாஸ்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது. ரோகித் சர்மா இல்லாத சூழலில் இந்திய அணியின் கேப்டனாக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா செயல்படுகிறார். முன்னதாக இரு அணிகளின் கேப்டன்களும் ஒன்றாக இணைந்து பார்டர் கவாஸ்கர் கோப்பையை அறிமுகம் செய்து வைத்தனர். அதன்பின் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர். அதில் முகமது ஷமி அணிக்கு திரும்புவது குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த பும்ரா, "ஷமி பாய் விளையாடத் தொடங்கியுள்ளார். அவர் எங்களுடைய அணியின் முக்கியமான வீரர். அவர் மீது இந்திய அணி நிர்வாகம் நெருக்கமான கண்களை வைத்திருக்கும் என்று உறுதியாக சொல்வேன். எனவே விஷயங்கள் சரியாக இருந்தால் அவர் இங்கே விளையாடுவதை உங்களால் விரைவில் பார்க்க முடியும்" என்று கூறினார். முன்னதாக காயத்திலிருந்து மீண்டு வந்த முகமது ஷமி தற்போது உள்ளூர் தொடர்களில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.